கருத்தமைதி – அக்டோபர் 2020

பிரான்சிஸ்கன் நற்செய்தி வழியில் அச்சுப் பிசகாத வாழ்வு

நம் தந்தை பிரான்சிஸ் அசிசியாரின் வாழ்வு நற்செய்தி வழியில் அச்சுப்பிசகாமல் வாழப்பட்ட வாழ்வு. அவரைப் பொறுத்தமட்டில் நற்செய்திக்கான விளக்கங்களை வாழ்வது அல்ல. நற்செய்தியின் வார்த்தைகளை அப்படியே வாழ்வது. அதனால் வரும் எந்தவிதமான முரண்பாடுகளையும், சவால்களையும் ஏற்றுக்கொள்ளத் தன்னைத் தயாராக்கிக் கொள்வது. தந்தை பிரான்சிஸின் வாழ்வு எப்படி இன்றைய சூழலில் வாழு இயலும்? ஏன்று கேள்வி கேட்கும் நமக்கு இது ஒரு அக்கினிப் பிரவேசம். புடமிடப்படும் இந்த அனுபவத்திற்கு நம்மைக் கையளிப்போம்.

“தொடக்கத்தில் வாக்கு இருந்தது, அவ்வாக்கு கடவுளோடு இருந்தது. அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது. அவரிடம் வாழ்வு இருந்தது. அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது. அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது. இருள் அதன் மேல் வெற்றி கொள்ளவில்லை. வாக்கு மனிதர் ஆனார். நம்மிடையே குடிகொண்டார்” (யோவா 1:1,4,5,&14)

வார்த்தையானவர் வாழ்வு அளிப்பதற்காக மனித கோலம் பூண்டார். நிறை மகிழ்வோடு வாழ, தன்னுயிரைக் கொடுத்தார். எந்நாளும் மகிழ்ந்திருக்க நம்மோடு பயணிக்கிறார். நமக்குள்ளும் வசிக்கிறார், நம்மை அழைத்த இறைவன், நம்மோடு வாழும் இறைவன் நம் மத்தியில் நற்கருணை வடிவில் பிரசன்னமாய் இருக்கிறார். அவரது எல்லையற்ற அன்பிற்கு, இரக்கத்திற்கு, கருணைக்கு, ஆசீர்வாதங்களுக்கு, நன்மைத்தனத்திற்கு நன்றி கூறுவோம். நற்கருணை நம்மை வாழவைக்கிறது, மனதிற்கு அமைதி தருகிறது, உள்ளத்திற்கு ஆறுதல் தருகிறது. நன்மை செய்யத் தூண்டுகிறது, நீதியின் பாதையில் செல்ல நம்மை உந்தித்தள்ளுகிறது. தீமையை எதிர்க்கத் துணிச்சலைத் தருகிறது. போராட்டங்களைச் சந்திக்க மனதிடனைக் கொடுக்கிறது. இத்தகைய நற்கருணை ஆண்டவரைப் புகழ்ந்து ஆராதிப்போம். இறைப்பிரசன்னத்தில் அமர்ந்து, இறை ஒளியைப் பெற்று, இறை வழியில் நடப்போம் அவரின் நற்செய்தியாவோம்.

பாடல்: தேடும் அன்பு தெய்வம்….

‘‘ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு, அறிவிக்கவும், அவர் என்னை அனுப்பியுள்ளார்.’’ (லூக் 4:18-19) இயேசு வாசித்த இந்த மறைநூல் வாக்கு அவரின் பணிவாழ்வின் இலட்சியத்தைத் தெளிவுப்படுத்தியது. அவரது வாழ்வின் மீட்புத்திட்டத்தைக் கூர்மைப்படுத்தியது. இதைத்தான் எபி 4:12-ல் வாசிக்கின்றோம்.

“கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது, இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது” இத்தகைய சக்தி மிகுந்த வார்த்தை பலரை மனமாற்றியது. பலருக்கு மகிழ்ச்சி அளித்தது. சிலருக்கு திருத்தங்களைக் கொடுத்தது, பலருக்குச் சுகம் கொடுத்தது, சிலருக்குப் பயத்தைக் கொடுத்தது, அனைவருக்கும் மீட்பைக் கொடுத்தது. அதனால்தான் தூய பவுல் அடியார் உரோ 1:16-ல் நற்செய்தியை முன்னிட்டு வெட்கப்படமாட்டேன். ஏனெனில், அதுவே கடவுளின் மீட்பளிக்கும் வல்லமை என்று கூறுகிறார். இத்தகைய உயிருள்ள வார்த்தையானவரை உள்ளத்தில் இருத்தி தியானிப்போம்.

பாடல்: இயேசுவே உந்தன் வார்த்தையால்…

இயேசுவின் வார்த்தைக்கு உயிர் கொடுத்தவர்கள் பலர். அதிலும் குறிப்பாக அவரைப் போலவே வாழ வேண்டும் என நினைத்து, அவரின் குரலை இதயத்தில் கேட்டு, இறைவனுக்குப் பணிபுரிய உள்ளத்தில் உறுதி பூண்டு, நற்செய்தியின் வழியில் வாழ, துறவு வாழ்வை ஏற்றுக்கொண்டவர்தான் நம் புனிதர், நம் சபையின் 2-ம் பாதுகாவலர் அண்ணல் பிரான்சிஸ். இத்தாலி நாட்டில் அசிசி நகரில் செல்வந்தனாய் பிறந்து, அசிசி நகர அரசனின் கட்டளையின் பேரில் வீரனாய் போருக்குச் சென்று **“Go and Rebuild my Church”** என்ற இறைவனின் வார்த்தையால், தம் வழியை மாற்றி ஆலயத்தைப் பழுது பார்க்கத் தொடங்கினார் நம் அண்ணல் பிரான்சிஸ்.

இல்லாமையில் இன்பம் கண்டார், எளிய சகோதரர் என்று அழைக்கப்படுவதில் ஆனந்தம் கொண்டார். நற்செய்தி வழியில் நடக்க முற்பட்டார். இவரது வாழ்வு, நற்செய்தி வாழ்வுக்கான ஓர் புரட்சியாக அமைந்தது. வீரனாகப் போருக்குச் சென்றவர், ஏழ்மை வாழ்வை விரும்பினார். போ, என்று விரட்டிய பிச்சைக்காரனைத் தேடிப்பிடித்து உதவினார். தெருவில் நின்று தன் வீட்டிலேயே பிச்சை கேட்டார்.

விலகி ஓடிய தொழுநோயாளனைக் கட்டி அரவணைத்து முத்தமிட்டார். படைப்பனைத்தையும் உடன்பிறப்பாய் பாவித்தார். ஏழ்மைக்கோலம் ஏற்க அனைத்தையும் துறந்தார். வானகத் தந்தையைத் தன் தந்தை எனக் கொண்டு உறவுகளை, பெற்றோரை, உடன்பிறப்புகளை, இழந்தார். இவரின் வாழ்வு திருச்சபைக்கும், பிற துறவிகளுக்கும் ஓர் சவாலாக இருந்தது. இதற்குக் காரணம் வார்த்தை மனுவுருவாகி வாழ படிப்பினைகளைத் தந்த அன்பிற்காய் இன்னுயிரை ஈந்த இயேசுவின் இறை வார்த்தையின் வழியில் நடக்க இவர் துணிந்ததுதான்.

இறைமகன் கூறிய வார்த்தைகளை உள்ளத்தில் இருத்தி, தந்தை பிரான்சிஸின் துணையோடு பயணிக்க, இறையருள் வேண்டி இணைவோம் இப்பாடலில்.

பாடல்: உம்மை நான் நேசிக்கின்றேன் இறைவா…

நமக்குக் கொடுக்கப்பட்ட இந்த வாழ்நாட்களில் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தோம் என்பதை விட, எப்படி வாழ்ந்தோம் என்பதுதான் முக்கியம், எத்தனை மணிநேரம் செபித்தோம், பணிசெய்தோம் என்பதை விட, எப்படிச் செபித்தோம்? எப்படிச் செய்தோம்? என்பதுதான் முக்கியம். ஒரு நாளின் ஒவ்வொரு நொடிப்பொழுதையும் உயிரோட்ட முள்ளதாகச் செலவிடுவோம்.

ஆன்மீக வாழ்வு ஒரு போராட்டம் நிறைந்த வாழ்வு. போராடுகிறவர்கள் வெற்றி பெறுகிறார்கள், பல துன்பங்களைக் கடந்து நிலைவாழ்வை உணருகிறார்கள். பல சறுக்கல்களைத் தாண்டி உள் அமைதி பெறுகிறார்கள். மொத்தத்தில் இந்த வாழ்வில் வெற்றி பெற இறைவனோடு உள்ள உறவு, பிணைப்பு, அன்பு, பலப்படவேண்டும், ஆழம் பெற வேண்டும்,

இரண்டு தவளைகள் ஒரு வீட்டிற்குள் நுழைந்தன. அங்கே ஒரு பானையில் தயிர் இருந்தது. இரண்டு தவளைகளும் அதனைக் கண்டு புதுப்பொருளாக உள்ளதே, வாசமாக இருக்கிறதே என நினைத்து அதில் விழுந்தன. அதில் ஒன்று நான் செத்தேன், என்னால் மேலே செல்ல இயலவில்லை என்று கூறி இறந்துபோனது. மற்றொன்று, நான் வாழ வேண்டும் என நினைத்து அந்தப் பானையில் நீந்திக்கொண்டே இருந்தது. நேரம் ஆக ஆக தயிர் திரண்டு வெண்ணையாக மாறியது. தவளை அதன் மேல் நின்று வெளியில் குதித்தது. நம்முடைய வாழ்வும் இப்படித்தான். வாழ்வில் வரும் போராட்டங்களை நேர்மறையாக எதிர்கொள்பவர்கள் இறைவனைக் கண்டுகொள்கிறார்கள், வாழ்வில் வெற்றியும் பெறுகிறார்கள். நம் அன்னை அடைக்கலத் தாயும் இறைவனின் திட்டத்திற்குக் கீழ்ப்படிந்து தம் மகனின் மீட்புப் பயணத்தில் இறுதிவரை துணை நின்றார்.

நம் தந்தை பிரான்சிசும் இறைவனின் குரலுக்கு அடிபணிந்து, இறைவனின் பராமரிப்பில் தன்னைக் கையளித்து, அனைத்திலும் இறைவனின் திருமுகத்தைத் தரிசித்தார். இயேசுவோடு நெருங்கி அவர் அன்பில் மூழ்கி, அவரோடு உரையாடினார். அவரிடம் கொண்ட அன்பின் வெளிப்பாடாக, இயேசுவின் ஐந்து காயங்களைப் பெற்றுக்கொண்டார். அவரது ஆன்மீகத்தைப் பின்பற்றும் நாமும், அவர் எவ்வாறு நற்செய்தியின் வழியில் வாழ்ந்தார் என்பதனைச் சிந்திப்போம்.

அண்ணல் பிரான்சிஸ், இடர்களின் மத்தியில் புன்சிரிப்புடனும், சலனமற்ற மனநிலையோடும் செயல்பட்டார். அனைவராலும் வெறுத்து ஒதுக்கப்படுவதுதான் நிறைமகிழ்ச்சி ***(Perfect Joy***) என்று சொன்னார். உலகப் படைப்பு ஒவ்வொன்றிலும் இறை அன்பின் பிரதிபலிப்பை உணர்ந்தார். அமைதியின் கருவியாய் என்னை மாற்றும் என்ற அற்புதமான வரிகளைத் தனது வாழ்கையாக்கி இந்த உலகப் போராட்டத்தில் வெற்றி பெற்றார். அந்த வழியில் நாமும் பயணிக்க அருள் வேண்டுவோம்.

பாடல்: அமைதியின் தூதனாய்……

ஊற்று புத்தகம் இறுதிமுறி.14. ஆண்டவர் எனக்குச் சகோதரர்களைத் தந்தபின் நான் என்ன செய்யவேண்டும் என்று எனக்கு யாரும் காண்பிக்கவில்லை. மாறாக அதி உன்னதரானவரே, நான் தூய நற்செய்தியின் முறைப்படி வாழவேண்டும் என வெளிப்படுத்தினார். தந்தை பிரான்சிஸ் தம் வாழ்வின் எல்லா நிலையிலும் நற்செய்தி காட்டுகின்ற வழியில் நடந்தார். ஆண்டவர் இயேசுவை முழுமையாகக் கண்டுபாவிக்க ஆசைப்பட்டார். இந்த மாற்றம் அவருக்குள் எப்படி வந்தது?

கி.பி 1205-ல் சிலுவைப்போருக்குச் சென்ற அவர் ஸ்பொலேட்டோ என்ற இடத்தில் காட்சி கண்டு இறையனுபவம் பெற்றார். நற்செய்தியின் வழியில் வாழ அவருக்கு அடிப்படையாக இருந்தது, இந்த அனுபவம்தான் ***Francis whom do you want to serve: Master or Servant?*** யாருக்குப் பணிபுரிய விரும்புகிறாய்? கடவுளுக்கா அல்லது பணியாளருக்கா? கடவுளுக்கே! என்று கூறி ***Lord What do you want me to do?*** ஆண்டவரே நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்கிறார். அசிசிக்குத் திரும்பிச் செல்கிறார், தனிமையில் இறைவனைத் தேடுகிறார். தூய தமியான் ஆலயத்தில் திருச்சிலுவையிலிருந்து கேட்ட குரலுக்கு அடிபணிகிறார். நாமும் தனிமையில் இறைவனோடு உறவாடும் போதும், பல்வேறு சூழ்நிலைகளிலும், வறட்சியான, துன்பமான, நெருக்கடியான நிலைகளிலும் இறையனுபவம் பெறுகிறோம். இந்த இறையனுபவம் நம் வாழ்வில் கொண்டு வந்த மாற்றம் என்ன? சிந்திப்போம்.

அண்ணல் பிரான்சிஸின் இறையனுபவம் அவரை மறு கிறிஸ்துவாக மாற்றியது. நமது இறையனுபவம் நம்மை உண்மையை நோக்கிச் செல்ல, ஒளியை நோக்கி நடக்க, தீமையை விலக்கி வாழ, பரந்த சிந்தனையோடு வாழ, பாரபட்சம் இன்றிப் பழக, சுய மதிப்போடு வாழ, மனித மாண்போடு பிறரை நடத்த, கண்களில் கருணை உள்ளவர்களாகவும் இதயத்தில் இரக்கம் நிறைந்தவர்களாகவும் இருக்கத் தூண்டியுள்ளதா? சிந்திப்போம். இறைவனின் துணையை நாடுவோம்.

ஊற்றுப் புத்தகம் பக்: *86* எண்: *9-11* முடிய.

கி.பி 1208–ஆம் ஆண்டு தூய மத்தியாஸ் திருநாள் திருப்பலியில் வாசித்த வாசகம் தந்தை பிரான்சிஸ், நற்செய்தியின் வழியில் வாழ வழிகாட்டியது. மத்தேயு 10:7-12.

“விண்ணரசு நெருங்கி விட்டது என்று பறைசாற்றுங்கள்.

நலம் குன்றியவர்களைக் குணமாக்குங்கள்.

கொடையாகப் பெற்றுக் கொண்டீர்கள் கொடையாகக் கொடுங்கள்.

தொழுநோயாளரை நலமாக்குங்கள் உங்களுக்குச் சமாதானம் என்று வாழ்த்துங்கள்.”

இந்த நற்செய்தி வாசகத்தின் விளக்கத்தைக் கேட்டதும், தானாக விரும்பி வறுமையை ஏற்றுக்கொள்கிறார், இறை பராமரிப்பில் தன்னை ஒப்படைக்கிறார். தான் சந்தித்தவர்கள் அனைவருக்கும் சமாதானம் கூறுகிறார். நாமும் நம்முடைய வாழ்வில் பல இறைவார்த்தைகளைப் படித்திருக்கிறோம், கேட்டிருக்கிறோம். நம் உள்ளத்தைத் தொட்ட வார்த்தைகளை, நம்மைத் தேற்றிய இறைவார்த்தைகளை, நம் நம்பிக்கையை ஆழப்படுத்திய இறைவார்த்தைகளை எடுத்துரைப்போம்.

தூய ருபினோ ஆலயத்தில் தனது முதல் மறையுரையை ஆற்றுகிறார். இவரின் சொற்களைக் கேட்டும், வாழ்க்கை முறையைப் பார்த்தும் பலர் சீடர்களாக இவரோடு இணைகிறார்கள். இவரது நற்செய்தி வாழ்வு, பலருக்கு வழிகாட்டியாக அமைகிறது. தூய நிக்கோலாஸ் ஆலயத்தில், பின்வரும் இறைவார்த்தைகளை இறை உந்துதலில் பெறுகிறார்.

மத் 19 : 21

"நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய் உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர், பின்பு வந்து என்னைப் பின்பற்றும்".

லூக் 9:3

"பயணத்திற்கு கைத்தடி, பை, உணவு, பணம் போன்ற எதையும் எடுத்துக்கொண்டு போக வேண்டாம்"

மத் 16 : 24

"என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தன் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்"

இதைத்தான் நாம் செய்யப் போகிறோம் என்று சொல்லி இந்த வார்த்தைகளை அப்படியே கடைபிடிக்கிறார். இவர்களது நற்செய்தி வாழ்வு பலரை ஈர்க்கிறது. மொரோக்கோ என்னும் இடத்தில் மறைப்பணிக்காகச் சென்ற சகோதரர்கள் கொல்லப்பட்டார்கள். இவர்களது மறைசாட்சிய வாழ்வால் ஈர்க்கப்பட்டு தூய அகுஸ்தினார் சபையில் இருந்த புனித அந்தோணியார் தந்தை பிரான்சிஸின் எளிய சபையில் சேர்ந்தார். நம்முடைய பணிவாழ்வு, அர்ப்பணவாழ்வு சாட்சிய வாழ்வு ஒருவரையேனும் ஈர்த்துள்ளதா ? சிந்திப்போம்.

பாடல்: உன் பணி வாழ்வையே எங்கள் அகலாக...

நம் தந்தை பிரான்சிஸ் செபித்த கர்த்தர் கற்பித்த செபத்தை, அனைவரும் இணைந்து செபிப்போம். ***ஊற்று புத்தகம் பக்: 109.***

இன்றைய சூழலில் நற்செய்தியை வாழ்வாக்க....

அமைதியின் தூதுவர்களாக மாறும்போது

பிறரை மன்னித்து ஏற்கும் போது

சகிப்புத்தன்மையோடு வாழும் போது

ஒதுக்கப்பட்டவர்களை அரவணைக்கும் போது

உண்மைக்குக் குரல் கொடுக்கும் போது

எளிமையாக வாழ முற்படும் போது

குழுமத்தில் பிறரை நம்மை விட உயர்வாக எண்ணும் போது

எளிதில் அணுகக்கூடியவர்களாக இருக்கும்போது

பிறரைப் பற்றிப் புறங்கூறாமல் இருக்கும்போது

இயற்கையை நேசிக்கும் போது

இயற்கை வளங்களைப் பராமரிக்கும் போது

இயற்கை வளங்களைத் தேவைக்கு மட்டும் பயன்படுத்தும் போது

நோயுற்றோரைச் சந்திக்கும் போது

உடைந்து போனவர்களை ஆற்றுப்படுத்தும் போது

மற்றவரை ஒதுக்காமல் வாழும் போது

எந்த அடையாளத்திற்குள்ளும் நம்மை அடையாளப்படுத்தாமல் வாழும் போது

பரந்த சிந்தனையோடும், விசாலமான பார்வையோடும் நாம் வாழும் போது

நற்செய்தியை வாழ்வாக்குகிறோம்.

பாடல் : ஒரு கோடிப் பாடல்கள் நான்

எங்களுக்குத் தாயும் தந்தையுமானவரே நாங்கள் நலமோடு வாழ இன்னுயிரை ஈந்தவரே, வளமோடு வாழ உம் வார்த்தையைக் கொடுத்தீரே உம் சொற்கேட்டு நற்செய்தியின் வழியில் வாழவும், எமக்கு வழிகாட்டியாய் இருக்கும் தந்தை பிரான்சிஸின் பரிந்துரையைப் பெற்றுக் கொள்ளவும், கண்களில் கருணையும், பார்வையில் பாசமும்

கைகளில் ஈகையும், கருத்துக்களில் இரக்கமும், உள்ளத்தில் பொறுமையும், உடலில் தியாகமும், சிந்தனையில் நல்லெண்ணமும், செயல்களில் விவேகமும் கொண்டு வாழ்வோம். ஆமென்.

நாம் தனிமையில் இறைவனோடு உறவாடும்போதும் பல்வேறு சூழ்நிலைகளிலும், வறட்சியான, துன்பமான, நெருக்கடியான நிலைகளிலும் இறையனுபவம் நம் வாழ்வில் கொண்டு வந்த மாற்றம் என்ன? சிந்திப்போம். அண்ணல் பிரான்சிஸின் இறையனுபவம் அவரை மறு கிறிஸ்துவாக மாற்றியது? நமது இறையனும் நம்மை உண்மையை நோக்கிச் செல்ல, ஒளியை நோக்கி நடக்க, தீமையை விலக்கி வாழ, பரந்த சிந்தனையோடு வாழ, பாரபட்சம் இன்றிப் பழக, சுய மதிப்போடு வாழ மனித மாண்போடு பிறரை நடத்த, கண்களில் கருணை உள்ளவர்களாகவும் இதயத்தில் இரக்கம் நிறைந்தவர்களாகவும், இருக்கத் தூண்டியுள்ளதா? சிந்திப்போம் இறைவனின் துணையை நாடுவோம்.

ஊற்று புத்தகம் பக்: 86-88, 9-11 முடிய

Prepared by

SR. JEBAMALAI (864) and SR. AMALORPAVA MARY (1128)